# வெள்ளவாய பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

---

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 16 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, வெள்ளவாய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து கிடைத்திருந்த டிரக்டர் வண்டியின் உரிய பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் காப்புறுதிப் பெறுமதியாகிய ரூபா 1,500,000 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்

---

(அ) 1988 முதல் 2000 வரை மற்றும் 2002 முதல் 2008 வரையான 19 வருடங்கள் தொடர்பாக சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 330,812 இற்கான கணக்காய்வு கட்டணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல வருட காலமாக முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் சபையினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,117,805 இற்கான நீர் கட்டணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு தொகையின் மீதி ரூபா 957,412 ஆகும்.

(ஈ) 2005 ஆண்டு முதல் 2013 மார்ச் வரை அறவிடப்பட்டிருந்த ரூபா 1,813,914 இற்கான பெறுமதி கூட்டியவரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் செலுத்தப்பட வேண்டிய வைப்பு என கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் தற்போது கடமையில் இல்லாத 60 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 133,191 இற்கான நிலுவை பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 182,672,702 இற்கான 05 சொத்து விடயங்களை மற்றும் ரூபா 34,140,985 இற்கான 02 பொறுப்பு விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| 1989 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| i. பிரிவு 19 (1)(i) | உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பிரதியீட்டு மற்றும் அமைய அடிப்படையில் நூலக உதவியாளர், சாரதிகள் மற்றும் தொழிலாளர் ஆகிய பதவிகளுக்கு 10 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மொத்த சம்பளம் ஊழயர் சேமலப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆக ரூபா 595,498 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| ii. பிரிவுகள் 132(ஓ) மற்றும் (ஓ) | அமைச்சரின் அங்கிகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மாணவர் உதவி மற்றும் மருத்துவ உதவியாக மீளாய்வாண்டின் போது ரூபா 425,100 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,213,369 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,668,370 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைதல் ரூபா 9,455,001 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 47,541,689 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வீதவரி

-----------

(அ) மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 5,889,209 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை நடைமுறை வரி என அறவீடு செய்யப்பட்டிருந்தது ரூபா 1,785,076 ஆகும். அவை மொத்த பில் போடப்பட்ட பெறுமதியில் நூற்றிற்கு 30 போன்ற குறைந்த பெறுமதி சதவீதத்திலேயே காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 5,929,812 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது அந்த நிலுவை வருமானத்தில் ரூபா 1,828,354 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 31 ஆக காணப்பட்டது வீதவரி நிலுவை ஆண்டுதோறும் அதிகரித்திருந்தது.

2.2.3 குத்தகை

-------------

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக வெள்ளவாய வாராந்த சந்தை கேள்வி கோறப்படாமல் 2013 ஆண்டின் போது வாராந்த சந்தையை குத்தகைக்கு எடுத்திருந்த குத்தகையாளருக்கே ரூபா 1,920,300 இற்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெள்ளவாய வாராந்த சந்தையில் ரூபா 160,000 மாதாந்த குத்தகை தவணைப் பணம் தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டும் எனினும் அவ்வாறு நடைபெறாமையால் மீளாய்வு ஆண்டிற்கான அறவிடப்பட வேண்டிய ரூபா 295,600 இற்கான தாமதத் தண்டப்பணத்தினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.4 கடை வாடகை

----------------------

(i) பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடியில் உள்ள 07 கடைகள் மற்றும் புதிய கடைத் தொகுதியில் 11 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) புது கடைத் தொகுதியில் இலக்கம் 02, 03, 12, 27, 28 மற்றும் 29 ஆகிய கடைகளுக்காக பணம் செலுத்தியிருந்த போதும் வாடகை உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 1980 திசெம்பர் 31 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகையை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) புதிய சிறப்பு சந்தையின் இலக்கம் 38 மற்றும் 39 கடைகளை 2013 ஆகஸ்ட் 07 திகதி முதல் மீன்பிடி அமைச்சுக்கு வழங்கியிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

2.2.5 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அவ் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தில் நடத்தப்படும் 01 ஹோட்டல் மற்றும் 04 தங்குமிடங்கள் தொடர்பாக குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய வருடத்திற்கான பெறுவனவுகளில் நூற்றிற்கு ஒன்றினை மேற்படாத கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த தொகை பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப்பணம் | 1,409,491 |
| முத்திரை கட்டணம் | 1,424,881 |

2.3 மிகை விதிப்புக்கள்

------------------------------

1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 172(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபருக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்பின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புகளின் பெறுமதி ரூபா 70,338 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

----------------------------------------------

(அ) இலக்கம் 32 – 1134 கொண்ட டயஹட்ஸு ஜீப் வண்டியின் திருத்த வேலைக்காக 2013 மார்ச் 15 திகதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2014 ஜனவரி 30 ஆந் திகதி ரூபா 100,000 இற்கான முற்பணம் ஒன்றினை செலுத்தியிருந்தது. ஜீப் வண்டியின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் 2014 ஆகஸ்ட் 27 திகதி சபைக்கு கொண்டுவரப்பட்டு வளவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் முற்பண தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஜனவரி முதல் மே 12 வரை இலக்கம் 252 – 6335 கொண்ட சபையின் கப் வண்டிக்காக 3100 லீட்டரகள் மற்றும் 10 லீட்டர்கள் எண்ணெய் என்பவற்றிற்காக ரூபா 381,009 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இந்த எரிபொருள் பயன்படுத்தப்பட்டது தொடர்பான ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 534,082 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்தும் விளக்குளின் வகை, எண்ணிக்கை என்பன பற்றிய விபரங்களை பதிவு செய்திருக்கவில்லை.

(ஈ) 2009, 2013 மற்றும் மீளாய்வாண்டின் போது அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் மின்சாரம், தொழில்நுட்ப, வெளிக்கள தொழிலாளர் சுகாதார தொழிலாளர்கள், இயந்திர இயக்குனர் மற்றும் சாரதிகள் ஆகிய பதவிகளுக்கு சேகரிக்கப்பட்டிருந்த 11 பேர் அங்கீகரிக்கப்பட்ட மீளாய்வாண்டு அக்டோபர் 24 திகதி நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் பதவியணியில் அவர்கள் அங்கியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அதற்கான மொத்தச் சம்பளம், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என ரூபா 14,692,055 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

(அ) சபையின் அங்கீகாரம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2014 ஜூன் 20 திகதி முதல் 2014 ஜூலை 21 திகதி வரை தலைவரின் அரச கருமத்திற்கான இலக்கம் KR – 7838 கொண்ட வாகனத்தை வாடகைக்கு பெறுவதற்காக ரூபா 120,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆகஸ்ட் 01 முதல் 31 வரை தலைவரின் அரச கருமங்களுக்கான இலக்கம் PP – 4182 கொண்ட கப் வண்டியினை வாடகைக்கு பெறுவதற்காக ரூபா 100,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் அதே காலப்பகுதிக்காக இலக்கம் 252 – 6335 கொண்ட சபையின் கப் வண்டிக்காகவும் ரூபா 15,769 பெறுமதியான 130

லீற்றர்கள் எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் ஒரே காலப்பகுதிக்காக இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. ஓட்ட குறிப்புக்கள் உரிய முறைப்படி பேணப்பட்டிருக்காமையால் மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) பல்வேறு கருமங்களுக்காக பல்வேறு இடங்களுக்கு போவதற்காக வாடகை வாகனங்களை வாடகையை பெறுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 04 சந்தர்பங்களில் ரூபா 78,440 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2013 நெறிமுறை அடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் புபுதுவெவ குடிநீர் வழங்களுக்காக ரூபா 930,550 செலவிடப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து 503 நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நீர்மானிகள் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் கோறப்படல் முறைசார் விதமாக நடைபெற்றிருக்கவில்லை. அத்துடன் நீர் மானிகள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்றிற்கு சமர்பித்திருக்கவில்லை. கொள்வனவு செய்திருந்த நீர்மானிகள் சந்தையில் நடைபெறும் விலையை விட கூடுதலான விலைக்கு கொள்வனவு செய்துள்ளமையால் ரூபா 264,075 தொகை ஒன்று மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு